[28th September 1961

instruct all private firms and other organisations in the City as well as in the State to have their personnel recruited through our employment exchange so as to alleviate this unemployment problem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: That is also being done.

SRI S. RAMALINGA PADAYACHI: ஸார், மத்திய அரசாங்கத்தில் உத்தியோகத்திற்கு ஆள் எடுக்கும்போது, முற்பட்ட சமூகத்தினர், பிற்பட்ட சமூகத்தினா அல்லது தாழ்த்தப்பட்டோர் என்ற வகையில் ஆள் எடுக்கப்படுகிறதா அல்லது தகுதியை வைத்துக்கொண்டு ஆள் எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இந்தப் பாகுபாடு எல்லாம் கிடையாது. இதிலே எந்த அரசாங்கமாக இருந்தாலும், நியமனம் செய்யும்போது அதற்கென்று என்னென்ன விதிகள் இருக்கிறதோ அந்த விதியை அனுசரித்துதான் எடுத்துக்கொள்வார்கள்.

SRI A. A. RASHEED: Is it not a fact that scarcity of jobs is due to competition of women for the same jobs along with man?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not know about that.

Beedi Workers (Outdoor.)

*1873Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா— பீடி (out-door) வேலை செய்யும் தொழிலாளர்களை லைசென்சு வாங்கும்படி நிர்ப்பந்திக்கும் முறையில் தொழிலாளர் இலாகா அதிகாரிகள் கீழ் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளார்களா? விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இங்கே பீடித் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் செய்வதற்கு முன்னால், முதலாளிகளை அவுட்-டோரில் இருக்கிற தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்போது தொழிலாளர்களையே லைசென்ஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கக் கூடிய அளவுக்கு நிலைமை இருப்பதோடு மாத்திரமல்ல. அதிகாரிகளும்கூட, எங்களுக்கு ஒன்றும் தெரியாது, நீங்கள்தான் லைசென்ஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுவது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may give this information. The Commissioner of Labour has reported that it is not correct to say that officers of the Labour Department have been instructed to compel the out-door workers employed in the beedi industry to apply for licence under the Act. On the other hand they have been instructed to take action against anyone who uses or intends to use the premises for manufacture of beedies. The Commissioner of Labour has further stated that those workers can give names of the employers for whom they roll beedies. Action will be taken in such cases against those persons for whom they roll beedies.

28th September 1961]

SRI S. PAKKIRISWAMY PILLAI : பீடித்தொழிலாளர்களுக்கு உண்டான சட்டத்தை சரிவர நிர்வகிக்க எத்தனை லேபர் ஆபீசர்கள் சென்னையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ? அவர்கள் மாதாந்திர ரிப்போர்டு அரசாங்கத்திற்கு கொடுத்துக்கொண்டு வருகிறார்களா ? இந்த ரிப்போர்டுகளை இந்தச் சபையின் முன்னால் வைக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். பீடித்தொழிலாளர்களுக்கு என லேபர் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. இருக்கிறவர்களை வேண்டுமானால் அதிகப்படுத்தப்படும். மற்ற விவரங்களுக்கு தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், தொழிற்சாலைக்கு வெளியே சொந்த இடத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று, பீடி உற்பத்தி செய்யக்கூடிய முதலாளிகளுக்கே ஏன் உத்திரவு பிறபிக்கவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றித் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

Cement Factories

* 1874 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) the total number of cement factories working in the State as on 1st June 1961;

(*b*) the capacity of all the factories;

(*c*) the actual production for the year 1960–61;

(*d*) whether any new factory will be started in the State; and

(*e*) if so, when and where?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Four.

(*b*) The licensed capacity of the four factories is 15,08,910 tons per annum.

(*c*) 11,19,624 tons.

(*d*) *and* (*e*) The Government of India propose to grant a licence for the establishment of a new cement factory in Sankaridrug taluk, Salem district.

SRI M. KALYANASUNDARAM : ஸார், 11 லட்சம் டன்னுக்கு அதிகமாக நம்முடைய ராஜ்யத்திலே உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தின் தேவை எவ்வளவு ? இந்த சிமெண்டு வெளியே விநியோகிக்கப்படுகிறதா ? பற்றுக்குறை இருந்தால், அந்தப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனியாக கேள்வி வேண்டும். எவ்வளவு நம் தமிழ் நாட்டிற்குத் தேவை இருக்கிறது என்பதற்கு அப்போது பதில் சொல்லலாம். மொத்தத்திலே நமக்கு சிமெண்டு அதிகமாக வேண்டியிருக்கிறது. அதனால் பொதுவாகவே நாட்டிலே பற்றுக்குறை இருந்து வருகிறது. அதற்காகத்தான் புதிதாக சங்ககிரிக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டு சிமெண்ட் ஆலைகள் கரூர் பக்கத்திலே அமைப்பதற்கு கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.